நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
O/L DAY CLASS
DEC 1990
விஞ்ஞானம்—இரா.செல்வ வடிவேல்
கணிதம் — ரவி
தமிழ் )
சமயம் ) — பண்டிதர்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 140 செவ்வாய் 03-07-1990 (ஆனி 19) துல்ஹஸ்தா 09

நிரு டியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
DAY CLASSES
O/L DEC 1990
நடைபெறுகின்றன.
ஆங்கிலம் — பாலா
சமூகக்கல்வி — மஃறூப்
— வேலா
வர்த்தகம் — நவம்

★ போரும், பேச்சும் ஏக காலத்தில் சாத்தியமே
கோட்டை முற்றுகையைக் கைவிட்டால்

# புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த அரசாங்கம் தயார்

## கொழும்பில் நேற்று ரஞ்சன் அறிவிப்பு

"யாழ். கோட்டை மீதான முற்றுகையை விடுதலைப் புலிகள் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது" என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின நேற்று அறிவித்தார்.

''போர் நிறுத்தத்துக்கான சாத்தியக் கூறுகள் இல்லை. புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று ஏற்கனவே அரசாங்கம் தெரிவித்து விட்டது'' என்றும் அவர் குறிப்பிட்டார்,

''போரும், பேச்சுவார்த்தைகளும் ஒரே நேரத்தில் நடைபெறலாம். அது சாத்தியமே'' என்றார் அவர்.

இது இவ்வாறு இருக்க, யாழ். கோட்டைக்குள் உள்ள படையினர் பற்றித் தகவல் ஏதுமில்லை என்று கொழும்பில் இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

இக்கோட்டையை புலிகள்

— 04ஆம் பக்கம் பார்க்க

## யாழ்நகர் நேற்றும் இடுகிடுத்தது பல கட்டிடங்கள் தகர்ந்தன

நேற்று முற்பகல் முதல் மாலைவரை யாழ்நகரில் ஸ்ரீலங்கா குண்டு வீச்சு விமானங்கள் பாரிய தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதல்களின் போது எவருக்கும் தெய்வா தீனமாகக்காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது,

நண்பகல் இந்துக்கல்லூரிக் கருகில் இடம்பெற்ற பொம்மர்த் தாக்குதலில் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. பல வீடுகள் பாதிப்புக்குள்ளாகின. பதுங்கு குழிகளில் மக்கள் இருந்ததால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இராமச்சந்திரன், தில்லைநாதன் இராமலிங்கம் துரைராஜா

— 04 ஆம் பக்கம் பார்க்க

பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் பற்றி ஈரோஸ் விளக்கம்

## பிரேமதாஸவும் பௌத்த சிங்கள மேலாண்மையின் கைப்பொம்மை

''பௌத்த சிங்களமேலாண்மையை நிலைநிறுத்தும் பேரினவாத சக்திகளின் கைப்பொம்மையாகிவிட்டார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவும் என்பதே தமிழ் பேசும் மக்கள் அறிந்து கொண்ட உண்மை'' என்று ஈரோஸ் தமது பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை விளக்கி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கையின் விபரம் வருமாறு:

கடந்த நாற்பதாண்டு காலமாக இடம்பெற்றுவந்த அரசியல்ரீதியான அடக்கு முறைகளை எதிர் கொள்ளவே தமிழ் பேசும் மக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதைக்கு உந்தப்பட்டவர்கள் என்பதை எவரும் மறந்து விட முடியாது. வீறு கொண்டெழுந்த மக்களின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க மறுத்து இராணுவரீதியாக அழித்துவிட எடுக்கப்பட்ட முயற்சிகள் இன அழிப்பு என்ற வடி

—04 ஆம் பக்கம் பார்க்க

இந்தியாவும் தலையிடாது

## எந்த நாடும் தலையிடக்கூடாது இந்தியத் தரப்பில் வலியுறுத்து

(புதுடில்லி)

இலங்கை அரசின் பிரதிநிதியாக புதுடில்லி சென்ற பேர்னாட் திலகரட்ன நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலை சந்தித்துப் பேச்சுகளை நடாத்தினர்.

தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் இந்தியா தலையிடமாட்டாது எனவும் விடுதலைப் புலிகள் இந்தியாவைத் தளமாகப் பாவிக்க அனுமதிக்கப்பட மாட்டார்

— 04ஆம் பக்கம் பார்க்க

## தாண்டிக்குளத்தில் புலிகள் நேரடி மோதல்

கடந்த வியாழக்கிழமை தாண்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில்விடுதலைப் புலிகள் தரப்பில் ஆறு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

லெப். செந்தில், லெப்.

— 04ஆம் பக்கம் பார்க்க

கடல் மூலம் தப்ப முயன்ற

## தமிழ் அகதிகள் திருமலையில் கடற்படையால் கொலை

திருகோணமலையில் ஸ்ரீலங்கா அரசபடைகள் நடத்தும் அட்டூழியம் பொறுக்க முடியாமல் கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்ல முயன்ற நா... பது அப்பாவித் தமிழர்களை கடற்படை கடலில் வைத்துக்

—04 ஆம் பக்கம் பார்க்க

புலிகளின் தாக்குதலால்

## பதுங்கு குழிக்குள் ராணுவம் அதோகதி எனச் சந்தேகம்

நேற்று காலை மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து இராணுவத்தினர் பதுங்கு குழிகளுக்குள் ஓடிச் சென்றபோது அங்கு குண்டு ஒன்று வெடித்ததில் பதுங்குகுழி முற்றாக இடிந்து விழுந்துள்ளது

இச்சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டதாக தெரிவிக்

—04ஆம் பக்கம் பார்க்க



ஈ. என். டி. எல். எப் கோரிக்கை:

# 'இலங்கை விவகாரத்தில் கருணாநிதி தலையிடக்கூடாது'

இலங்கை விவகாரத்தில் கருணாநிதி தலையிடக் கூடாதென ஈ. என். டி. எல். எப். சென்னையில் கேட்டுள்ளது.

தற்பொழுது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது விடுதலைப் புலிகள் — அரசு மோதலாகும்.

இந்த மோதலில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதாக கருத முடியாது.

இலங்கை விவகாரத்தை கருணாநிதி பெரிது படுத்த முனைகின்றார். இதன்மூலம் இலங்கைப் படையினரின் தாக்குதலை நிறுத்தி விடுதலைப்புலிகளைப் பாதுகாக்க கருணாநிதி முயற்சி எடுக்கின்றார்.

அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளின் போராளிகளை தமிழகத்தில் சிறையில் தள்ளிய கருணாநிதி விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க முற்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என இது தொடர்பாக ஈ. என். டி. எல். எப். சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பகுதி பஸ்களில் 200 இரர்ணுவத்திடம்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் சேவையாற்றி வந்த போக்குவரத்துச் சபை பஸ்களில் 200 பஸ்களை இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்

கொழும்பில் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இதேவேளை இராணுவத்தினர் தமது தேவைக்கு பஸ் வண்டிகளைக் கோருமிடத்து உடனடியாக அவை வழங்கப்பட வேண்டுமென போக்குவரத்து அமைச்சு பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்கு பணித்துள்ளது. (கி)

## கால்நடை உணவின் விலையும் இங்கு அதிகரிப்பு

(மூளாய்)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பகுதிக்குள் கோழித்தீனுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், கோழி வளர்ப்பவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கோழித்தீனை வைத்திருக்கும் வியாபாரிகள் கூடிய விலையில் விற்பதற்காக பதுக்கி வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் தற்சமயம் ஒரு பைக்கற் லேயர்ஸ் கோழித்தீனின்விலைரூபா முந்நூறாக அதிகரித்துள்ளது. (ப- 1கி)

யாழ். செயலகத்தில்

## இறந்தோர், காயமுற்றோர் விபரங்கள் சேகரிப்பு

யாழ். மாவட்டத்தில் தற்போது இடம் பெற்று வரும் வன் செயல்களினால் இறந்த காயமடைந்த பொதுமக்களின் விபரங்கள் யாழ் செயலகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பதிவுகள் ஏதும்இல்லாத காரணத்தினாலும் வைத்தியசாலைகள்பொலிஸ்ப்பகுதிகள் போன்றவை இயங்காத காரணத்தினாலும் இறந்தவர்களினதும், காயப்பட்டவர்களினதும் விபரங்களை சரியாகப் பெறமுடியாதுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்றுவாரங்களில் பலர் காயமடைந்துள்ள போதும் இவர்களில் பலர் தனியார் வைத்தியசாலைகளிலும் கிராமப்புற வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளதால் அவர்களது விபரங்கள் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல சடலங்கள் பதிவுகள் ஏதுமின்றி அடக்கம் செய்யப்பட்டுள்ளதனாலும் இறந்தவர்கள் அடையாளம் காணப்படாததனாலும் இறந்தோர் விபரங்களை சரியாகப் பெறமுடியாதுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03-ஸ்ரீ)

## சரசாலையில் அதிக அகதிகள்

(மட்டுவில்)

மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் 1500க்கும் அதிகமான அகதிகள் வந்து சேர்ந்துள்ளனர். அச்சுவேலி, பலாலி, வளலாய் ஆகிய பகுதிகளிலிருந்த மக்களே இவர்கள்.

கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா தேவாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், சரசாலை வடக்கு சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இடங்களில் இவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

மட்டுவில் வேலுப்பிள்ளை சனசமூக நிலையத்தினர் இம்மக்களுக்கு பல வழிகளிலும் உதவி வருகின்றனர்,

சுகாதார திணைக்களஉத்தியோகத்தர்கள் சென்று சுகாதார தேவைகளை கவனித்து வருகிறார்கள், (ப-4கி)

கடந்த சனி இடம்பெற்ற

## கிளிநொச்சித்தாக்குதலை அடுத்து மக்கள் கிராமங்களுக்கு நகர்வு

கடந்த சனிகிளிநொச்சியின் நகர்ப்பகுதியில் இடம் பெற்ற ஆகாயத்தாக்குதலையடுத்து பொதுமக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறி வருகின்றார்கள்.

இத்தாக்குதலில் புதிய ரக விமானம் ஒன்றும்இரண்டு பழைய இத்தாலிய விமானங்களும் குண்டுகளை வீசின ஹெலிகளும் அவ்ரோ விமானங்களும் நகரைவட்டமிட்டு உத்தரவுகள் பிறப்பித்தன.

கிளிநொச்சி பரந்தன் முறிகண்டி, கரடிப்போக்கு தர்மபுரம், திருநகர் கனகபுரம், ஆகிய பகுதிகளில் குண்டுகள் விழுந்தன. தர்மபுரத்தில் வீசப்பட்ட குண்டு வீச்சில் கிறிஸ்தவதேவாலயம் ஒன்றும் சில கடைகளும் சேதமடைந்தன. இத்தாக்குதலில் சுந்தரராஜன்என்பவர் மரணமடைந்தார்.

முறிகண்டியில் வீசப்பட்ட குண்டுகளால். பலகடைகள் சேதமடைந்ததோடு பலர் படுகாயத்திற்குள்ளானார்கள். இப்பகுதியில் உள்ள காடுகள் மீது பரல்குண்டுகள்வீசப்பட்டதால் அவை எரிந்து கொண்டிருந்தன. (கி)

## '1983-ல் கிடைத்ததே 1990 இலும் கிடைக்கிறது'

(முள்ளியான்)

உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தினால் இடம் பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் 'பெமிற்றின்' பெறுமதி போதாது என்று இடம் பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்தனர்.

1983-ம் ஆண்டு வழங்கப்பட்ட தொகையே 1990-ம் ஆண்டும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ள வேளையில் ஒரு வாரத்திற்கு என வழங்கப்படும் தொகை ஒரு நாளைக்கே போதுமானதாக இருப்பதாக இடம் பெயர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

தற்சமயம் தங்களுக்கு எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் கிடைப்பதில்லை எனவும் தாங்கள் உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் வழங்கப்படும் நிவாரணத்தை மட்டுமே நம்பியிருப்பதாகவும் இடம் பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

உதவி அரச அதிபர் அலுவலகத்தினால் ஒரு வாரத்திற்கு ஒருவருக்கு 55/- பெறுமதியான உணவுப் பொருட்களே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.(43கி)

## வர்த்தகருக்கு அபராதம்

(கீரிமலை)

சுன்னாகத்தில் மாவிலை கூட்டிவிற்று கொள்ளைலாபம் தேட முயன்ற வர்த்தகர் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (48 கி)

## கல்வி நிர்வாகச் சேவைக்கு 19 தமிழர் நியமனமாவர்

இலங்கை கல்வி நிர்வாகச் சேவைக்கு மேலும் சிலதமிழர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தற்பொழுது புதிதாக கல்வி நிர்வாகச் சேவைக்கு 132பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் எட்டுப்பேர் தமிழர், ஆறுபேர் முஸ்லிம்கள்.

அரசின் புதிய இனவிகிதாசார வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி புதிதாக சேர்க்கப்பட்டோரில் தமிழரின் தொகைகுறைவாக உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே மேலும் 19 தமிழர்களை இப்பதவிகளுக்கு சேர்க்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (கி)

கொழும்பில் சில தினங்களில்

## 1600 தமிழ் இளைஞர் கைது; வெளியார் தங்கவும் தடை

கொழும்பில் கடந்த சில தினங்களில் மட்டும் 1600 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்தோராவர்.

இவர்களைக் கைது செய்ய தலையாட்டிகளை பொலிஸார் பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க் கொழும்பில் வீடுகளில் வெளியார் எவரையும் தங்குவதற்கு உரிமையாளர்கள் அனுமதிக்கக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே தமிழ்க்கடைகளில் அங்கு பணிபுரிவோர் தவிர்ந்த ஏனையோர் தங்குவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (கி)

பூணாவையில் இராணுவத்தால் திருப்பப்பட்ட

## மூன்று பஸ்கள் பயணிகளுடன் கொழும்பைச் சென்றடைந்தன

கடந்த வியாழக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்டுப் பின்னர் பூணாவையில் வைத்து இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்ட மூன்று பஸ்கள் பயணிகளுடன் கொழும்பைச் சென்றடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பயணிகள் இடையில் ஏற்பட்ட 'அனுபவங்களால்' பீதியுற்ற நிலையில் இருப்பதனால் கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்ட வாகனங்களில் யாழ்ப்பாணம் வர அவர்கள் எத்தனிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த பஸ்களுக்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸாரை இராணுவத்தினர் அங்கீகரிக்கவில்லையெனவும், அவர்களையும் பிரயாணிகளுடன் சேர்ந்து நடக்குமாறு அவர்கள் பணித்து அவமரியாதை செய்ததாகவும் கொழும்பிற் புகார் செய்யப்பட்டுள்ளது. (கி)

---

பழந் தமிழர் வீரக் கோலங்கள்
கோலம் : 2 (நேற்றைய தொடர்ச்சி)

### சென்று வா மகனே; செருமுனை நோக்கி!

''எதிரிகளின் படையெடுப்பால் – நம் குடும்பம் தழை உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பி! கவலையில்லை - களம் சென்றார்; மாண்டார்! ஆனாலும் இந்த நிலம் உள்ளவரையில் 'மானங்காத்தார்' என்ற பெயர் பூண்டார்! என் மகனே! நீயும் தோளில் பலம் உள்ள வரையில் பகையைச் சாடு! பரணி பாடு! இது உன் தாய்த் திருநாடு! - உடனே ஓடு!''

'' எதிரிகளின் படையெடுப்பால் - நம் குடும்பம் தழை
உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பீ !
கவலையில்லை -
களம் சென்றார் ; மாண்டார்!

ஆனாலும் இந்த
நிலம் உள்ளவரையில் 'மானங்காத்தார்' என்ற பெயர்பூண்டார்!
என் மகனே! நீயும் தோளில்
புலம் உள்ளவரையில் பகையைச் சாடு!
பரணி பாடு! இது உன்
தாய்த் திருநாடு! - உடனே ஓடு!'' எனத்,
தாவி அணைத்துத் தளிர்மகன் தன்னைச்
சீவிமுடித்துச் சிங்காரித்து , ரத்தக்
காவிபடிந்த வாள்கொடுத்துச்

''சென்று வா மகனே, செருமுனை நோக்கி!''
என வாழ்த்திவிட்ட திருவிடத்துக்
காட்சிதனைப் - போற்றிப் பாடாதார் உண்டோ!
திருமகளே! இந்தப் பூவுலகில்? ...............

சங்கத் தமிழ் நூலிலிருந்து - கலைஞர் கருணாநிதி அவர்கட்கு நன்றியுடன்.
தேர்வு : 'கங்கா'

# சிறிய செய்திகள்

## வடம.கிழக்கில் 25 அகதிமுகாம்

(முள்ளியான்)

வடமராட்சி கிழக்கில் சுமார் 25 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது இவற்றில் சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் உள்ளனர்.

மேலும் அகதிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்த மக்களாகும்.

தற்சமயம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மூலம் கிடைக்கும் நிவாரணம் மட்டுமே இவர்களுக்கு கிடைத்து வருகின்றது.

இவ் அகதிகளில் பெரும்பாலானவர்கள் தமது உடமைகள் அனைத்தையும் இழந்து உடுத்த உடுப்புடன் வந்து சேர்ந்தவர்கள் ஆவர். (43 கி)

## பல்கலைக் கழகத்தில் இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியச் சங்கத்தின் அவசரப் பொதுக் கூட்டம் இன்று காலை பத்து மணிக்கு நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியச் சங்கத்தலைவர் கலாநிதி சோ.கிருஷ்ணராஜா மேற்படி பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்.

இன்றைய நெருக்கடி நிறைந்த அபாயகரமான காலகட்டத்தில் இடம்பெறும் இப் பொதுக் கூட்டம்மிகவும் முக்கிய விஷயங்களை உள்ளடக்கியதாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## பிரதான வீதியில் வங்கி ஆவணங்கள்

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட பொம்மர் தாக்குதலினால்யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்திய நிலையம் முற்றாகச் சேதமடைந்துளளது,

இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த முக்கிய ஆவணங்கள் பிரதான வீதியில் சிதறிக் கிடக்கக்காணப்பட்டன. (கி)

## அலுவலகம் இடமாற்றம்

(கீரிமலை)

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க அலுவலகம் கடந்த வாரம் இடம் பெற்ற வான் தாக்குதலில் சேதமடைந்ததையடுத்து துர்க்காபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.(48 கி)

## அரச அதிபர் பார்வையிட்டார்

கடந்த வெள்ளிக்கிழமை விமானத்தாக்குதல்களினால் நருநகரில் 30 க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன அவற்றுள் 10 வீடுகள் முற்றாகவே நிர்மூலம் ஆக்கப்பட்டு விட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் அவர்களும், யாழ் உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளையும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். (16 கி)

## ரியூட்டரிகளும் இயங்கவில்லை

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் கடந்த சில தினங்களாக நடைபெறும் இராணுவத் தாக்குதல்களை அடுத்து மூடப்பட்டுள்ளன.

இதேவேளை நகரின் முக்கிய பாடசாலைகள் யாவும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளன. கிராமப்புறத்திலுள்ள பாடசாலைகள் பல இராணுவ, விமானத் தாக்குதல்களினால் வெளியேறிய மக்களின் அகதிமுகாம்களாக மாறியுள்ளன. இதன் காரணமாக இப்பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

நீண்ட கால இடைவெளிக்குப்பின்னர் இவ்வாறான நிலைமை இங்கு ஏற்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஒருவர் கவலை தெரிவித்தார். (கி)

## நல்லூர் 'இராஜதானி' எனப் பெயர் மாற்றம்

(நாயன்மார்கட்டு)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புதிதாகப பிரிக்கப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒன்றான நல்லூர் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு நல்லூர் இராஜதானி கிராமசேவையாளர் பிரிவாகப் பெயர்மாற்றப்பட்டுள்ளதாக கிராம சேவை அலுவலர் ஆர். சந்திரகுமார் அறிவித்துள்ளார். (33கி)

## உற்சவம் ஒத்திவைப்பு

(வட்டுக்கோட்டை)

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் தற்போது நாட்டில் காணப்படும் அமைதியற்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த புதன் கிழமை இவ் ஆலய உற்சவம் துவஜாரோஹணத்துடன் ஆரம்பமாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

## துர்க்காபுரத்தை நாடும் அகதிகள்

(கீரிமலை)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் வலி வடக்கைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். இவர்களது தேவைகளை தேவஸ்தான நிர்வாகி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கவனித்து வருகிறார். (48கி)

## சான்றிதழ் நடைமுறை மீண்டும் அமுலாகும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசு பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நடைமுறை மீண்டும் அமுல் செய்யப்படவுள்ளது.

கடந்த சில வருடங்களாக இத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. கல்வி அமைச்சின் புதிய திட்டத்தின் படி இவ் வருடத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசு பரீட்சையில் சித்தியடையும் மாணவர்க்கு சான்றிதழ் வழங்கப் படும். (கி)

தப்பி வந்தோர் தரும் தகவல்

# நிலாவெளி பொம்மர் தாக்குதலில் 36 அகதிகள் உடல்சிதறிப் பலி

நிலாவெளியில் அரிசி ஆலை ஒன்றில் அகதிகளாக இருந்த மக்கள்மீது பொம்மர் தாக்குதலை மேற்கொண்டபோது 36 பேர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து ஆழியவளையில் அகதியாக தஞ்சம் அடைந்துள்ள திருகோணமலை வாசி ஒருவர் தெரிவித்தார்.

பொம்மர் தாக்குதலுக்கு உள்ளான நிலாவெளி அகதி முகாமிலிருந்து இடம் பெயர்ந்து கால் நடையாக ஆழியவளையை அடைந்த இவ் அகதிகள் தெய்வாதீனமாக தாம் உயிர் தப்பியதாக தெரிவித்தார்.

திருகோணமலையிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் நிலாவெளியில் அரிசி ஆலை ஒன்றிலும், தேவாலயம் ஒன்றிலும் அகதிகளாகத் தங்கியிருந்தனர். இச் சுற்றாடலில் சுமார் 10 ஆயிரம் அகதிகள் தங்கியிருந்தனர்.

தேவாலயங்களிலும், பொது இடங்களிலும் மக்கள் கூடுமாறு ஹெலி மூலம் இராணுவத்தினர் துண்டுப்பிரசுரம் போடப்பட்டதையடுத்து மக்கள் இங்கு தஞ்சம் அடைந்தனர்.

இச்சம்பவத்தில் சடலங்கள் சிதறி இனம் காணமுடியாத நிலையில் இருந்ததாகவும், பெண்களும், குழந்தைகளும் இதில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வில்கம் விகாரை இராணுவ முகாமிலிருந்தும் தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்படுவதால் இப் பகுதி பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (43கி)

# சிங்களக் கிராம வாசிகளுக்கு படையினரின் ஆயுதங்கள்!

வடக்கு, கிழக்கு எல்லைப் புறங்களிலுள்ள சிங்களக் கிராம வாசிகளுக்கு பல புதிய ஆயுதங்கள் அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், பொலநறுவ எல்லைக்கிராமங்களில் மட்டும் நாலாயிரம் ஆயுதங்கள் பாதுகாப்புப் படையினரால் கிராம வாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதிக் கிராமப் புறங்களில் பல பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு இரவு பகல் பாதுகாப் புப்பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று எல்லைப் புறங்களிலுள்ள மேலும் பல கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் பாதுகாப்புப் படையினரால் பயிற்சிகள் வழங்கப் பட்டு துப்பாக்கிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

சிங்களக் கிராமங்களில் தற்பொழுது இயங்கிவரும் ஊர் காவல் படையினரின் வழி நடத்துதலில் இக்கிராம வாசிகள் இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ளசிங்களக் கிராமங்களுக்கு பல புதிய இராணுவப் படைப்பிரிவுகள் அனுப்பப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)

## மருதங்கேணியில்

(முள்ளியான்)

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் அனைத்து மக்களுக்கும் உணவுப்பொருட்களை வழங்குவதற்கான 'தற்காலிகஅனுமதிப்பத்திரம்'' மருதங்கேணி உதவி அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்உதவி அரச அதிபர் பிரிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டகுடும்பங்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து வந்து தங்கியுள்ளார்கள்,

55 ரூபாவிற்கும் 200 ரூபாவிற்கும் இடைப்பட்ட பணத் தொகையான பெமிற் குடும்ப அங்கத்தவர் தொகையைப் பொறுத்து வழங்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து வந்த மக்கள் தங்கள் பகுதிகளிலுள்ள கூட்டுறவுக் கடைகளில் பொருட்களைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43கி)

## மாணவன் படுகாயம்

அண்மையில் பலாலி இராணுவமுகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் தனது சகோதரனை இழந்து படுகாயமடைந்த மாணவன் ஒருவன் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

வசாவிளான் ஆலடி என்னுமிடத்திலேயே இந்த பரிதாபச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அ.மகேஸ்வரன் (வயது 15) என்ற வசாவிளான் மத்தியகல்லூரியில் படிக்கும் மாணவனே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவரது மூத்த சகோதரரான அ.குரரேஸ்வரன் (வயது 17) என்பவரே இச் சம்பவத்தில் மரணமடைந்தவராகும். இவர் மகாஜனாக் கல்லூரியின் மாணவராவார். (03 கி)

## புதிய கலப்பு எரிபொருள் குடாநாட்டில் கண்டுபிடிப்பு

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு புதியவகை எரிபொருள் ஒன்றை நமது விற்பன்னர்கள் கண்டு பிடிக்க வழிசமைத்திருக்கிறது. பெற்றோல் தட்டுப்பாட்டினால் மோட்டார் சைக்கிள் களைக் கூட செலுத்தமுடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது அல்லவா?

இதனை ஈடுசெய்யும் வகையில் திரப்பன்தைலம் (தேப்பன்ரைன்) ரின்னர் என்பவற்றைக் கலந்து இப்புதிய எரிபொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

திரப்பன்தைலத்தையும், ரின்னரையும் இரண்டுக்கு ஒன்று என்றவகையில் கலந்து மோட்டார் சைக்கிள்களுக்குப் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புதிய கலப்பு எரிபொருள் என்ஜினுக்கு பாதிப்பு எதனையும் ஏற்படுத்தாது எனவும் தெரிவிக்கப்பட்டது. இதேபோன்று ஸ்பிரிட்டினைப் பயன்படுத்தியும் மோட்டார் சைக்கிளை இயக்கமுடியும். (கி)

## கொழும்பில் 'சுரங்க' புரளி

கொழும்பில் புதிதாக 'சுரங்க' புரளி ஒன்று கிளப்பி விடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் நிலத்துக்கடியிலான சுரங்கமொன்றை விடுதலைப் புலிகள் அமைத்துள்ளனர் என சிங்கள தினசரியொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதனைப்போன்று அங்கு அடிக்கடி புதிய பல வதந்திகளும் திட்டமிடப்பட்ட வகையில் பரப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்பு மாநகரத்தின் பாதுகாப்புப் பொறுப்பு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கி)

## வீரர் மரபு வாழ்க!

வரும் பகைவர் படைகண்டு
மார்தட்டிக் களம் புகும்
மக்களைப் பெற்றோர் வாழ்க!

மனங்கொண்ட துணைவர்க்கு
விடைதந்து வேல்தந்த
மறக்குலப் பெண்கள் வாழ்க!

உரங்கொண்டு போராடி
உதிரத்தில் நீராடி
அறங்காத்த உள்ளம் வாழ்க!

திறமான புகழ்கொண்ட
திடமான தோள்களும்
செயல் வீரர் மரபும் வாழ்க!

—V. கல்யாணசுந்தரம்

# கனடாவிலிருந்து வந்தவர் இராணுவ முகாமில் அவதி

கனடாவில் இருந்து திரும்பியவரை ஆட்டோ ரிக்ஷாவில் கடத்திச்சென்று அவரின் அனைத்து உடமைகளும் அபகரிக்கப் பட்ட சம்பவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கணவன் கனடாவில் இருந்து வருவதாக செய்தியறிந்த மனைவி கொழும்பு சென்று அவரை அழைத்துக்கொண்டு கொழும்பில் உள்ள தமது உறவினர் வீட்டுக்கு செல்வதற்காக ஆட்டுப்பட்டித் தெருப்பகுதியில் பஸ்ஸிற்காக காத்திருந்தனர் என்றும் அப்போது ஆட்டோ வரவே இருவரும் ஆட்டோவை மறித்து தமது பொருட்களை அதில் ஏற்றிய பின்னர் கணவர் முதலில் ஆட்டோவில் ஏறிக் கொண்டார் என்றும் இவரை தொடர்ந்து மனைவியும் ஏற முயற்ச்சிப்பதற்கு முன்னதாகவே ஆட்டோ கிளம்பிச் சென்று விட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தனியான இடத்திற்கு அவரை அழைத்துச்சென்ற ஆட்டோ சாரதி அவரது சகல பொருட்களையும் பறித்துக்கொண்டு அவரையும் மகர இராணுவமுகாமில்ஒப்படைத்தும் விட்டார் என்றும் அறிய வருகிறது.

தகவலறிந்து அவரது மனைவி மகர இராணுவ முகாம் சென்றபோது அப்படிப் பட்ட எவரும் முகாமில் இல்லை என அவர்கள் கைவிரித்து விட்டனராம். இப்போது கணவனையும் காணாது அவரது உடமைகளையும் இழந்து அப்பெண் செய்வதறியாது கொழும்பில் தங்கியுள்ளார். (ஸ்ரீ)

# முறிகண்டிக் காடுகள் தீப்பற்றி எரிகின்றன

ஸ்ரீலங்கா அரச படைகள் தொடர்ந்து நிகழ்த்திவரும் தீக்குண்டு பொழிவுத் தாக்குதல்களால் முறிகண்டிப் பகுதிக் காடுகள் தீப்பற்றி எரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது, பல கட்டிடங்கள் இதனால் சேதமுற்றுள்ளதாகவும் தேவாலயம் ஒன்றுகூட தீக்குள்ளானதாகவும் தகவல் வெளியாகியுள்ளது, ஸ்ரீ

ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கை:

# அரசியல் கட்சிகள் கருத்துப்பேதம் அகன்று ஒன்றாக இணைகின்றன

வடக்கு கிழக்கில் தற்போது நடைபெற்று வரும் யுத்த நிலைமைகள் குறித்து நேற்றுக்காலை ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தற்போதைய வட,கிழக்கு நிலைமை குறித்து எதிர்கட்சியினருக்கு விளக்கமளித்தார்.

அரசின் நிலைப்பாட்டையே எதிர்க்கட்சிகளும் கொண்டுள்ளதாகப் பின்னர் தெரிவிக்கப் பட்டது.

வடக்கு, கிழக்கில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை நியாயப்படுத்த தென்னிலங்கை அரசியல் கட்சிகள்இவ் விடயத்தில் தத்தம் கருத்து பேதங்களை மறந்து ஒன்று பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு நிலைமையில் அரசாங்கத்தின் செயற்பாட்டை வெளிநாடுகளுக்கு குறிப்பாக 'சார்க்' உறுப்பு நாடுகளுக்கு விபரிக்க பாராளுமன்ற அரசியற் கட்சிகளையும் உள்ளடக்கிய தூதுக்குழு ஒன்றை அனுப்ப வேண்டுமென்று நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவுக்குச்சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். மொஹமட் தலைமை தாங்குவார்.

இக்குழு ஸ்ரீலங்கா அரசின் உத்தியோக பூர்வ பிரதிநிதித்துவக் குழுவாக தம் கருத்தை மேற்படி நாடுகளுக்கு விளக்கும் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ)

# அம்பாறையில் அட்டூழியம் 84 இளைஞர் சுட்டுக்கொலை

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை பகுதியில் இராணுவத்தினர் 84 தமிழ் இளைஞர்களை கைது செய்து முகாமுக்கு அழைத்து சென்று அங்கு அவர்களைச் சுட்டுக் கொன்றதாகத் தெரியவருகிறது,

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தினர் தமிழ் இளைஞர்களை தொடர்ந்து கைது செய்து வருவதாகவும், கைது செய்யப்படும் இளைஞர்கள் பற்றிய தகவல்களை பெறமுடியாதிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீ

சிசு ஜனனித்து நாட்கள் 2

# திருமலையிலிருந்து நடையாக வந்து சேர்ந்த தியாகத் திருவுரு

ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த தாய் குழந்தை பிறந்து இரண்டு நாட்கள் மட்டும் கழிந்த நிலையில் தமது உடல் நிலையையும் பாராது குழந்தையின் உயிரையும், தனது உயிரையும் காப்பாற்றிக் கொள்வதற்காகத் திருகோணமலையிலிருந்து பல மைல்கள் கால்நடையாக நடந்து வடமராட்சி கிழக்கை வந்தடைந்த சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

கடந்த மாதம் 11ந் திகதி குழந்தையை பெற்றெடுத்த இவர் 13ந் திகதி திருகோணமலையில் தாக்குதல்கள் ஆரம்பமானவுடன் தமது கைக் குழந்தையுடன் 3ம் கட்டையை அடைந்து அங்கிருந்து 35 மைல்களுக்கு அப்பாலுள்ள புடவைக்கட்டுவரை கால்நடையாக வந்ததாகவும் இவரின் பரிதாப நிலையை அறிந்த படகு உரிமையாளர் ஒருவர் கொக்குளாய் வரை படகில் கொண்டுவந்து விட்டதாகவும், அங்கிருந்து தமது உறவினர்களுடன் கால்நடையாக இங்கு வந்து சேர்ந்ததாகவும் வடமராட்சி கிழக்கில் தங்கியிருக்கும் மேற்படி பெண்மணி தெரிவித்தார்.

தனது உடல் நிலைக்கப்பால் இப்படியான ஒரு அசாதாரண துணிவும், பலமும் எவ்வாறு வந்தது என்பதை நினைக்கும் போது தமக்கே வியப்பாக இருப்பதாக மேற்படி குழந்தையின் தாயான திருக்கடலூரைச் சேர்ந்த திருமதி வசந்தராஜன் தெரிவித்தார். (ஸ்ரீ)

## பிரேமதாஸவும்...

வத்தை எட்டியது. தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை நசுக்க சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலிய மொசாட்டுக்களும், சின்பெத்துக்களும், பிரித்தானிய எஸ். எ. எஸ்களும், பாகிஸ்த்தானிய கூலிகளும் வரவழைக்கப்பட்டனர்.

புதிய உத்திமுறைகள் கொண்ட இராணுவ நடவடிக்கைகளும், தாக்குதல்களும் தொடர்ந்தன. தமிழ்பேசும் மக்கள் சளைக்காமல் போரிடலாயினர். இந்த நிலைமையிலேயே இந்திய அரசுடன் கபடத்தனமான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்ட இலங்கை அரசு இந்தியப்படைகளை இங்கு வரவழைத்தது. சதிவலைபின்னித்தமிழ் பேசும் மக்களுடன் இந்நியப்படையை மோதவிட்டும், வேடிக்கை பார்த்தது.

தேசிய-சர்வதேசிய நிலைமைகளினால் இடை நிறுத்தி வைத்திருந்த இனப்படுகொலைத் திட்டத்தை மீண்டும் எவ்வித தயக்கமும் இன்றி ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்துவிட்டது என்பதையே கடந்த சுமார் இருபது நாட்களாக இடம்பெறும் சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன. கிழக்கில் தமிழ் பேசும் மக்களைத்தம் சொந்த மண்ணில் இருந்து வெளியேற்றி அகதிகளாக்கல், கண்மூடித்தனமான குண்டு வீச்சு, திருமலையை இராணுவ மயமாக்கல், எல்லைப்புறக் கிராமங்களுக்கு பாதுகாப்பு என்ற போர்வையில் சிங்கள காடையர்களை ஆயுதபாணிகளாக்கல், தமிழ் பேசும் மக்களை சித்திரவதை - படுகொலை செய்தல் என இன அழிப்புத் திட்டம் நாளாந்தம் அரங்கேற்றப்படுகின்றது.

வழக்கம் போல ஸ்ரீலங்கா ஜனாதிபதி தனது பாணியில் இப்போர் நன்மைக்கும், தீமைக்குமான போர் என்றும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதல்ல என்றும் தார்மீகத் தத்துவப் பின்னணியில் விளக்கம் அளித்து விடுகின்றார். உணவு - மருத்துவம், போக்குவரத்து - தொலைத்தொடர்பு வசதிகள் எதுவுமற்ற இராணுவ அடக்குமுறையின் கீழ் மக்களை வாட்டி வதைத்துவரும் அதே வேளையில் தத்துவ முலாம் பூசி உலகின் கண்களை மறைக்க ஜனாதிபதி முயற்சி எடுக்கின்றார். பௌத்த சிங்கள மேலாண்மையை நிலைநிறுத்தும் பேரினவாத சக்திகளின் கைப்பொம்மையாகிவிட்டார் ஜனாதிபதி பிரேமதாஸவும் என்பதே தமிழ் பேசும் மக்கள் அறிந்து கொண்ட உண்மை.

இந்நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு எமது நிலைப்பாட்டினை விளக்கும் கடமைப்பாடு உண்டு. இதுவரை காலமும் இன ஒடுக்கலுக்குச் சட்டம் இயற்றும் கருவியாக விளங்கிவந்தஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த ஒரு வருட காலமாக அங்கத்துவம் வகித்தமைக்கான காரணம், நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாம். தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டால் தேவையான ஆதரவினை வழங்க வேண்டி வரும் என்பதற்காகவே ஆகும். ஆனால் இனவாதத்தை கக்கும் எரிமலையாக நாடாளுமன்றம் மாறுகையில் அதற்கு எம்மவரில் ஒரு சாரார் முண்டு கொடுக்கும் வகையில் செயற்படும் போது நாம் இந்த நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

மேலும், எமது மக்கள் அச்சமும், பதட்டமும் நிறைந்த சூழலில் அத்தியாவசியதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அவலப்பட வேண்டிய வேளையில் கண்மூடித்தனமாக எமது மச்கள் கொல்லப்படுகின்ற இந்த நிலையிலும், கையாலாகாதவர்களாக நாடளுமன்றத்தில் அங்கம் வகிப்பது வெட்கக்கேடான செயலாகவே நாம் உணர்கின்றோம். எனவே, நாடாளுமன்றத்திலிருந்து முற்றாக விலகுவதற்கு முதற்படியாக நாடாளுமன்றத்தினை எதிர்வரும் 5ம் திகதியிலிருந்து பகிஷ்கரிக்கமுடிவு செய்துள்ளோம். ஏற்கனவே சர்வ கட்சி மாநாட்டின் அமர்வுகளிலிருந்து விலகி நிற்கும் நாம் பாராளுமன்றத்திலிருந்தும் விலகி நிற்போம்.

# இந்தியாவாலும் முடியாது

வடபகுதியில் யுத்தம் தொடரும் இந்தியா உட்பட எந்த நாடும் இந்தயுத்தத்தை தடுத்து நிறுத்த முடியாது என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ன தெரிவித்துள்ளார்.

# போராளி வீரமரணம்

காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும்- இராணுவத்திருக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஜக்சன் என்ற போராளி வீரமரணம் அடைந்துள்ளார். (ஸ்ரீ)

# பொறிவெடியில் இராணுவம் சிக்கியது

நேற்று முன்தினம் முள்ளிக்குளம் பகுதியில் முன்னேற முற்பட்ட இராணுவத்தினர் பொறிவெடியில் சிக்கியதால் 19 பேர் பலியானார்கள்.

இப் பகுதியில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. ஸ்ரீ

## யாழ்நகர்...

கஜேந்திரன் சதாசிவம்,கஜன் ஆகியோரதுவீடுகள்இத்தாக்குதலில்பெருமளவு சேதமடைந்துள்ளன. கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள இவ் வீடுகள் யாவும் நான்கு தடைவைகள் விமானத்தால் தாக்கப்பட்டன.

பிற்பகல் இடம்பெற்ற புதிய ரகவை- 8 விமானத்தாக்குதலில் யாழ்.கோட்டையைச் சுற்றியுள்ள பல கட்டடங்களும் வீடுகளும் சேதமடைந்தன.

இவ் விமானங்கள் சுமார் பத்துத் தடவைகள் பாரிய குண்டுகளை வீசின. இக் குண்டுகள் வீசப்பட்டஇடங்களில் பெரும் கிடங்குகள் உண்டாகின.கட்டடங்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்ட போதும் எவரும் காயமடையவில்லை.

மாலை 5- 30 மணியளவில் வந்த மூன்று பொம்மர் விமானங்கள் கோட்டை இராணுவ முகாமுக்கு உணவுப் பொதிகள் போடுவதற்கு முயற்சி செய்தன.

கடந்த சில தினங்களாகக் குண்டு மாரியால் கலங்கி வரும் யாழ். நகரம் நேற்றைய விமானத் தாக்குதலோடு ஏராளமான கட்டடங்களையும் பொருட்களையும் இழந்து பரிதாபமாக காட்சியளித்துக்கொண்டிருக்கின்றது. (03-ஜெ ஸ்ரீ)

## தமிழ்...

சுட்டுக்கொன்றுவிட்டது. என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

திருகோணமலையில் ஏககாலத்தில் ஸ்ரீலங்காப் படைகளால் பல முனைத் தாக்குதல் நிகழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ)

## எந்த நாடும்...

கள் எனவும் இந்தியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் வேறுஎந்த நாடும் தலையிடக்கூடாது எனவும் இந்தியா வலியுறுத்தியது.

பாகிஸ்தானையே இந்தியா இவ்வாறு குறிப்பிட்டதாக கருதப்படுகிறது.

## புலிகளுடன்...

பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் சுற்றிவளைத்துள்ளதாகவும் அவ்வதிகாரி கூறியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இது இவ்வாறு இருக்க. ஸ்ரீலங்கா வெளியுறவுச் செயலர் திரு. பெர்னாட் திலகரத்ன நேற்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. துபேயைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை பற்றி விளக்கவிருந்தார்,

அவர் பிரதமர் திரு. வி. பி சிங், வெளியுறவு அமைச்சர் திரு.குஜ்ரால் ஆகியோரையும் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (ஸ்ரீ)

# மண்டைதீவில் தரையிறங்கப் பிரயத்தனம்

யாழ் நகரில் ஒரேநேரத்தில் ஹெலிகள் தாக்குதல்கள் நடத்தும் வேளையில் புலிகளின் கவனத்தைத் திசை திருப்பி மண்டைதீவில் துருப்புகளை இறக்குவதற்குத் திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளளப்படுகிறதா என்ற சந்தேகம் பலமாக பொது மக்கள் மத்தியில் அடிபடுகிறது.

## தாண்டிக்குளத்தில்...

அசோக், நித்திலன், மௌலிசன், கணேசலிங்கம், இன்பன் ஆகிய ஆறு போராளிகளே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

இராணுவத்தரப்பில் உயிர் சேதங்கள் ஏற்பட்டதுடன் வாகனங்களும் சேதம் அடைந்தன. (ஸ்ரீ)

## பதுங்குகுழி...

கப்படுகிறது.

மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து கடந்த சனிக்கிழமை ஏவப்பட்ட மோட்டார் ஷெல் தவறுதலாக இராணுவ முகாமிற்குள்ளேயே விழுந்ததால் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது,

இதேவேளை ஹெலியால் வீசப்பட்ட மோட்டார் ஷெல்லும் இராணுவமுகாமிற்குள்ளேயே விழுந்து வெடித்தது. ஸ்ரீ

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு ... உள்ள அச்சகத்தில் 03-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,